உ

கடவுள் துணை.

குருபாததாசரருளிச்செய்த

திருப்புல்வயல்

குமரேசசதகம்.



சென்னை

தாண்டவராயபிள்ளைவீதி (நெ-17)

அமரம்பேடு

கிருஷ்ணசாமிமுதலியார்

அவர்களது

கிருபாலக்ஷ்மிவிலாசஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

1903.

இதன்விலை அணா 2.

உ

கணபதிதுணை

குருபாததாசரவர்களால்செய்தருளிய

திருப்புல்வயல்

குமரேசசதகம்.

இவை

திருத்தணிகை

ஆறுமுகதேசிகரவர்களால்

பார்வையிடப்பட்டு,

NARAYANA MUDELY ST. MADRAS Nº 52.

ஆதிபுரி

இரத்தினவேலுமுதலியாரது

வாணீவிலாஸஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை;

1907.

நாராயணமுதலி வீதி 52 - வது நெம்பர் வீடு,

நூல்.

குமரேசர்மகிமை.

பூமிக்கொ ராறுதலை யாய்வந்து சரவணப்
 பொய்கை தனில் விளையாடியும்
புனிதர்க்கு மந்த்ரவுப தேசமொழி சொல்லியும்
 போதனைச் சிறையில் வைத்தும்
தேமிக்க வரிகரப் பிரமாதி கட்குஞ்
 செயிக்கமுடி யாவ சுரனைத்
தேகங் கிழித்துவடி வேலினா லிருகூறு
 செய்தமரர் சிறைதவிர்த்தும்
நேமிக்கு ளன்பரிட ருற்றசம யந்தனி
 னினைக்குமுன் வந்துதவியும்
நிதமுமெய்த் துணையால் விளங்கலா லுலகிலுனை
 நிகரான தெய்வ முண்டோ
மாமிக்க தேன்பருகு பூங்கடம் பணியுமணி
 மார்பனே வள்ளி கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே.

அந்தண ரியல்பு.

குறையாத காயத்ரி யாதிசெப மகிமையுங்
 கூடுசுரு திப் பெருமையுங்
கோதிலா வ கமபு ராணத்தின் வளமையுங்
 குலவுயா காதி பலவும்
முறையா நடத்தலாற் சகலதீ வினைகளையு
 முளரி * யோ லேதகிப் பார்
முதன்மைபெறு சிலைசெம்பு பிருதுவிக ளிற்றெய்வ
 மூர்த்தமுண் டாக்குவிப் பார்
நிறையாக நீதிநெறி வழுவார்க ளாகையா
 னீண்மழை பொழிந் திடுவதும்

---

* முளரி - அக்கினி.

நிலமது செழிப்பது மரசர்செங் கோல்புரியு
நிலையுமா தவர்செய் தவமும்
மறையோர்க ளாலே விளங்குமிவ் வுலகத்தின்
மானிடத் தெய்வ மிவர்காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (உ)

அரச ரியல்பு.

குடிபடைய மைச்சரா மந்திரா லோசனை
குறிப்பறிதல் சத்ய வசனங்
கொடைநித்த மவரவர்க் கேற்றமரி யாதைபொறை
கோடாத சதுரு பாயம்
படிவிசா ரணையொடு ப்ரதானிதள கர்த்தரைப்
பண்பறிந் தேய மைத்தல்
பல்லுயிரெ லாந்தன் னுயிர்க்குநிக ரென்றே
பரித்தல்குற் றங்கள் களைதல்
நொடிபெறு தனக்குறுதி யானநட் பகமின்மை
சுகுணமொடு கல்வி யறிவு
தோலாத காலமிட மறிநல்வினை வலிகண்டு
துஷ்டநிக் ரகசௌரியம்
வடிவுபெறு செங்கோ னடத்திவரு மரசர்க்கு
வழுவாத முறைமை யிதுகாண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரே சனே. (ங)

வணிக ரியல்பு.

கொண்டபடி போலும்விலை பேசிலா பஞ்சிறிது
கூடிவர நய முரைப்பார்
கொள்ளுமொரு முதலுக்கு மோசம்வா ராதபடி
குறுகவே செலவு செய்வார்

வண்டப் புரட்டர்தா முறிதந்து பொன்னடகு
வைக்கினுங் கடனீந்தி டார்
மருவுநா ணயமுளோர் கேட்டனுப் புகினுமவர்
வார்த்தையிலெ லாங்கொடுப்பார்
கண்டெழுது பற்றுவர வினின்மயிர் பிளந்தே
கணக்கிலணு வாகிலும் விடார்
காசுவீ ணிற்செலவி டாருசித மானதிற்
கனதிரவி யங்கள் விடுவோர்
மண்டலத் தூடுகண வர்த்தகஞ் செய்கின்ற
வணிகர்க்கு முறைமை யிதுகாண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு (ச)
மலைமேவு குமரேசனே.

வேளாள ரியல்பு.

நல்லதே வாலயம் பூசனை நடப்பது
நாடோறு மழைபொழிவ தும்
நாடியத போதனர்கண் மாதவம் புரிவது
நவில்வேத வேதிய ரெலாம்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதுந்
தொல்புவி செழிக்கு நலமுஞ்
சுபசோ பனங்களுங் கொற்றவர்கள் செங்கோ
றுலங்குமனு நெறி முறைமையும்
வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும்
விற்பனையு மதிக புகழும்
மிக்கவதி காரமுந் தொழிலாளர் சீவனமும்
வீரரண சூர வலியும்
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினுன் விளைவ தன்றோ
மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (ரு)

பிதாக்கள்.

தவமது செய் தேபெற் றெடுத்தவன் முதற்பிதா
தனைவளர்த் தவனொரு பிதா
தயையாக வித்தைதனைச் சாற்றினவ னொருபிதா
சார்ந்தசற் குருவொரு பிதா
அவமறுத் தாள்கின்ற வரசொரு பிதாவல்ல
லாபத்து வேளை தன்னி
லஞ்சலென் றற்றதுயர் தீர்த்துளோ னொருபிதா
வன்புளமு னோனொரு * பிதா
கவளமிடு மனைவியைப் பெற்றுளோ னொருபிதா
கலிதவிர்த் தவனொரு பிதா
காசினியி லிவரைநித் தம்பிதா வென்றுளங்
கருதுவது நீதி யாகும்
மவுலிதனின் மதியரவு புனைவிமல ருதவுசிறு
மதலையென வருகுருபரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௬)

ஒன்றையொன்று பற்றியிருப்பன.

சத்தியந் தவறா திருப்பவ ரிடத்தினிற்
சார்ந்துதிரு மாதிருக் கும்
சந்ததந் திருமா திருக்கும் விடந்தனிற்
றனதுபாக் கியமிருக் கும்
மெய்த்துவரு பாக்கிய மிருக்கும் விடந்தனில்
விண்டுவின் களையிருக் கும்
விண்டுவின் களைபூண் டிருக்கும் விடந்தனின்
மிக்கான தயையிருக் கும்
பத்தியுட னினியதயை யுள்ளவ ரிடந்தனிற்
பகர்தரும மிகவிருக் கும்
பகர்தரும முள்ளவ ரிடந்தனிற் சத்துரு
பலாயனத் திறலிருக் கும்

* முன்னோன் - தமையன்.

நேயமுட னேதன் சரீரத்தை யெண்ணாத
நிர்வாகி யேசூர னும்
நிலைபெறு மிலக்கண மிலக்கிய மறிந்துசொலு
நிபுணகவி யேகவிஞ னும்
ஆயுமொரு வாகடந் தாதிவினி தானமு
மறியுமதி யோன் வைத்திய
னதமின்றி மெய்யுணர்ந் தைம்புல னெறித்துவிட்
டவனேமெய்ஞ் ஞானி யெனலாம்
மாயவர் சகோதரி மனோன்மணிக் கன்பான
வரபுத்ர வடிவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே (கக

விரைந்தடக்கத் தகுவன விவையெனல்.

அக்கினியை வாய்முந்து துர்ச்சனரை வஞ்சமனை
யாளைவளர் பயிர்கொள் களையை
யஞ்சா விரோதிகளை யனியாய முடையோரை
யகிர்த்தியப் பெண்க ளார்ப்பைக்
கைக்கினிய தொழிலாளி யைக்கொண்ட வடிமையை
களவுசெய் யுர்த்திரரைக்
கருதிய விசாரத்தை யடிக்கமில் பாலகனைக்
கடிதான கோபந் தனை
மெய்க்கினித லாப்பிணியை யவையுதா சினத்தை
வினைமூண் டிடுஞ் சண்டையை
விஷமேறு கோரத்தை யன்றடக் குவதலான்
மிஞ்சவிட லாகாது காண்
மைக்கினிய கண்ணிகுற வள்ளிதெய் வானையை
மணஞ்செய்த பேரழ கனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (க2

இவர்க்கிது துரும்பெனல்.

தாராளமாகக் கொடுக்குந் தியாகிக
டக்குநற் பொரு ளுரும்பு
தன் னுயிரை யெண்ணாத சூரனுக் கெதிராளி
தளமெலா மொரு துரும்பு
பேரான பெரியருக் கற்பரது கையினிற்
பிரயோச னந் துரும்பு
பெரிதான மோக்ஷசிந் தனையுள் ளவர்க்கெலாம்
பெண்போக மொரு துரும்பு
தீராத சகலமும் வெறுத்ததுற விக்குவிறல்
சேர்வேந்த னொரு துரும்பு
செய்யகலை நாமகள் கடாக்ஷமுள் ளோர்க்கெலாஞ்
செந்தமிழ்க் கவி துரும்பாம்
வாரரு மணிகொண் முலை வள்ளிதெய் வானையை
மணம்புணரும் வடி வேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௧௯)

இதனை விளக்குவ திதுவெனல்.

பகல்விளக் குவதிரவி நிசிவிளக் குவதுமதி
பார்விளக் குவது மேகம்
பதிவிளக் குவதுபெண் குடிவிளக் குவதரசு
பரிவிளக் குவது வேகம்
இகல்விளக் குவதுவலி நிறைவிளக் குவதுநல்
லிசைவிளக் குவது சுதியூ
ரிடம்விளக் குவதுகுடி யுடல்விளக் குவதுண்டி
யினியசொல் விளக்குவ தருள்
புகல்விளக் குவதுகொடை தவம்விளக் குவதறிவு
பூவிளக் குவது வாசம்
பொருள்விளக் குவதுதிரு முகம்விளக் குவதுநகை
புத்தியை விளக்குவது நூல்

மகம்விளக் குவதுமறை சொல்விளக் குவதுநிசம்
 வாய்மையை விளக்குவது நீர்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (௧௪)

பிறப்பிட நன்மையால் தன்மை பெறுமை.

சிங்கார வனமதி லுதிப்பினுங் காகமது
 தீஞ்சொல்புகல் குயிலாகுமோ
திரையெறியும் வாவியிற் பூத்தாலு மேகொட்டி
 செங்கஞ்ச மலராகுமோ
அங்கான கத்திற் பிறந்தாலு முயலான
 தானையின் கன்றாகுமோ
வாண்மையா கியநல்ல குடியிற் பிறந்தாலு
 மசடர்பெரி யோராவரோ
சங்காடு பாற்கடல் பிறந்தாலு நத்தைதான்
 சாலக்கி ராம மாமோ
தடமேவு கடனீரி லேயுப்பு விளையினுஞ்
 சாரசர்க் கரையாகுமோ
மங்காத செந்தமிழ்க் குறுமுனிக் குபதேசம்
 வைத்தமெய்ஞ் ஞான குருவே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (௧௫)

பலர்க்கும் பயன்படுவன.

கொண்டல்பொழி மாரியு முதாரசற் குணமுடைய
 கோவுமூ ருணியி னீருங்
கூட்டமிடு மம்பலத் துறுதருவி னிழலுங்
 குடியாளர் விவசாய முங்
கண்டவர்க ளெல்லாம் வரும்பெருஞ் சந்தியிற்
 கனிபல பழுத்த மரமுங்
கருணையுட னேவைத் திடுந்தணீர்ப் பந்தலுங்
 காவேரி போலூற்ற முங்

விண்டலத் துறைசந்தி ராதித்த கிரணமும்
  வீசுமா ருத சீதமும்
விவேகியெனு நல்லோ ரிடத்திலுறு செல்வமும்
  வெகுசனர்க் குபகார மாம்
வண்டிமிர் கடப்பமலர் மாலையணி செங்களப
  மார்பனே வடிவேல வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
  மலைமேவு குமரேசனே. (கசு)

தாமழியினுங் குணமழியாதவை.

தங்கமா னதுதழலி னின்றுருகி மறுகினுந்
  தன்னொளி மழுங்கி டாது
சந்தனக் குறடுதான் மெலிந்துதேய்ந் தாலுமோ
  தன்மணங் குன்றி டாது
பொங்கமிகு சங்குசெந் தழலில்வெந் தாலுமோ
  பொசிவெண்மை குறை வுறாது
போதவே காய்ந்துநன் பால்குறுகி னாலும்
  பொருந்துசுவை போய் விடாது
துங்கமணி சாணையிற் றேய்ந்து விட்டாலுந்
  துலங்குகுண மொளியாது பின்
றுன்மைதரு பெரியோர மடிந்தாலு மவர்களது
  தூயநிறை தவறுமோ
மங்களகல் யாணிகுற மங்கைசுர குஞ்சரியை
  மருவுதிண் புயவாச னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
  மலைமேவு குமரே சனே. (கள)

நரகில் விழ்வோர்.

மன்னரைச் சமரில்விட் டோடினவர் குருமொழி
  மறந்தவர் கொலைப் பாதகர்
மாதாபிதா வைநிந் தித்தவர்கள் பரதார
  மருவித் திரிந்த பேர்கள்

அன்னங் கொடுத்தபே ருக்கழிவை யெண்ணினோ
ரரசடக் கிய வமைச்ச
ராலய மிகழ்ந்தவர்கள் விசுவாச காதக
ரருந்தவர் தமைப்பழித் தோர்
முன்னுதவி யாய்ச்செய்த நன்றியை மறந்தவர்
முகஸ்துதி வழக் குரைப்போர்
முற்றுசிவ பத்தரை நடுங்கச் சினத்தவர்கண்
முழுதும்பொய் யுரைசொல்லு வோர்
மன்னொருவர் வைத்தபொரு ளபகரித் தோ ரிவர்கண்
மாநரகில் வீழ்வ ரன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (கஅ)

சரீர சுகம்.

மாதத் திரண்டுவிசை மாதரைப் புல்குவது
மறுவறுவி ரோசனந் தான்
வருஷத் திரண்டுவிசை தைலம் தலைக்கிடுதல்
வாரத் திரண்டு விசையாம்
மூதறிவி னொடுதனது வயதினுக் கிளையவொரு
மொய்குழ லுடன்சை யோகம்
முற்றுதயிர் காய்ச்சுபா னீர்மோ ருருக்குநெய்
முதிரா வழுக்கை யிளநீர்
சாதத்தி லெவ்வளவா னாலும் புசித்தபின்
னுகந் தனக்கு வாங்கல்
தனையாக வுண்டபி னுலாவலிவை மேலவர்
சரீரசுக மாமென்பர் காண்
மாதவகு மாரிசா ரங்கத் துதித்தருற
வள்ளிக் குகந்த சரசா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (கக)

யார்க்கு மனுபோகம் விடாமை.

தேசுபெறு மேருப்ர தக்ஷிணஞ் செய்துமதி
தேகவடு நீங்க வில்லை
திருமா லுறங்கிடுஞ் சேடனுக் குவணன்
செறும்பகை யொழிந்த தில்லை
ஈசன் கழுத்திலுறு பாம்பினுக் கிடரவே
றிலாமலே வாயு வாகு
மினியகண் ணுகிவரு பரிதியா னவனுக்கி
ராகுவோ கனவி ரோதி
ஆசிலாப் பெரியோ ரிடத்தினி லடுக்கினு
மமைத்தபடி யன்றி வருமோ
வவரவர்க ளனுபோக மனுபவித் திடல்வேண்டு
மல்லால் வெறுப்ப தெவரை
வாசவனு மும்பர னைவரும்விசய சயவென்று
வந்துதொழு தேத்து சரணு
மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு (௨௦)
மலைமேவு குமரேசனே.

இதுவின்றி இது சிறவாதெனல்.

குருவிலா வித்தைகூ ரறிவிலா வாணிபங்
குணமிலா மனைவி யாசை
குடிநல மிலாநாடு நீதியில் லாவரசு
குஞ்சரமி லாத வெம்போர்
திருவிலா மெய்த்திறமை பொறையிலா மாதவந்
தியானமில லாத நிஷ்டை
தீபமில் லாதமனை சோதரமி லாதவுடல்
சேகரமி லாத சென்னி
உருவிலா மெய்வளமை பசியிலா வுண்டிபுக
லுண்மையில் லாத வசனம்
யோசனையி லாமந்த்ரி தைரியமி லாவீர
முதவியில் லாத நட்பு

மருவிலா வண்ணமலர் பெரியோ ரிலாதசபை
வையத் திருந்தென் பயன்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௨௪)

பகைக்கப்படாதவ ரிவரெனல்.

அரசர்பகை யுந்தவம் புரிந்தோ தணர்பகையு
மரியகரு ணீகர் பகையு
மடுத்துக் கெடுப்போர் கொடும்பகையு முட்பகையு
மருள்ளிலாக் கொலைஞர் பகையும்
விரகுமிகு மூரிலுள் ளோருடன் பகையுமிகு
விகடப்ர சங்கி பகையும்
வெகுசனப் பகையுமந் திரவாதி யின்பகையும்
விழைமருத் துவர்கள் பகையும்
உரமருவு கவிவாணர் பகையுமா சான்பகையு
முறவின்முறை யார்கள் பகையு
முற்றதிர வியமுளோர் பகையுமந் திரிபகையு
மொருசிறிது மாகாதுகாண்
வரநதியின் மலையென வினியசர வணமிசையில்
வருந்தருண சிறு குழவியே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௨௨)

பேயெனப்படுவோ ரிவரெனல்.

கடனுதவு வோர்வந்து கேட்கும்வே ளையின்முகங்
கடுகடுக் கின்ற பேயும்
கனமருவு பெரியதனம் வந்தவுட னிறுமந்து
கண்விழிக் காத பேயும்
அடைவுடன் சந்துருவின் பேச்சை விசுவாசித்
தகப்பட் டுழன்ற பேயு
மாசைமனை யாளுக்கு நேசமா யுண்மைமொழி
யானதை யுரைத்த பேயும்

இடரிலா நல்லோர்கள் பெரியோர்களைச்சற்று
மெண்ணு துரைத்த பேயு
மினியபரி தானத்தி லாசைகொண் டொருவற்
கிடுக்கண்செய் திட்ட பேயும்
மடமனை யிருக்கப் பரத்தையைப் புணர்பேயும்
வசைபெற்ற பேய்க ளன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனிடு
மலைமேவு குமரேசனே (உக)

அவ்வவவினத்தி லுயர்ந்தவை.

தாருவிற் சந்தான நதியினிற் கங்கைவிர
தத்தினிற் சோம வாரந்
தகைபெறு நிலத்தினிற் காஸ்மீர கண்டந்
தலத்திற் சிதம்பர தலம்
சீருலவு ரிஷிகளில் வசிட்டர்பசு விற்காம
தேனுமுனி வரினு ரதன்
செல்வ நவமணிகளிற் றிகழ்பதும ராகமணி
தேமலரி லம்போ ருகம்*
பேருலவு கற்பினி லருந்ததி கதித்திடு
பெலத்தின்மா ருதம் யானையிற்
பேசிலை ராவதந் தமிழினி லகத்தியம்
பிரணவம் மந்திரத் தில்
வாரிதியி லேதிருப் பாற்கடல் குவட்டினின்
மகாமேரு வாகு மன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனிடு
மலைமேவு குமரேசனே, (உச)

அவரவர்க்குப் பெலமாவன.

அந்தணர்க் குயர்வேத மேபெலங் கொற்றவர்க்
கரியசௌ ரியமே பெல
மானவணி கர்க்குநிதி யேபெலஞ் சூத்திரர்க்
காயினே ருழவே பெலம்

* அம்போருகம்-தாமரை;

மந்திரிக் குச்சதுரு பாயமே பெலநீதி
　மானுக்கு நடுவே பெலம்
மாதவர்க் குத்தவசு பெலமடி யர்க்குநிறை
　மானமிகு கற்பே பெலம்
தந்திர மிகுத்தகண சேவகர் தமக்கெலாஞ்
　சாமிகா ரியமே பெலஞ்
சான்றவர்க் குப்பொறுமை யேபெலம்புலவோர்
　தமக்குநிறை கல்வி பெலமாம்
வந்தனை செயும்பூசை செய்பவர்க் கன்புபெலம்
　வாலவடி வான வேலா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
　மலைமேவு குமரேசனே. (உரு)

இருந்தும் பயன்படாதவை.

தருணத்தி லுதவிசெய் யாதநட் பாளர்பின்
　றந்தெனத ராம லென்ன
தராதர மறிந்துமுறை செய்யாத மன்னரைச்
　சார்ந்தென்ன நீங்கி லென்ன
பெருமையுட னாண்மையில் லாதவொரு பிள்ளையைப்
　பெற்றெனபெ றாம லென்ன
பிரியமா யுள்ளன்பி லாதவர்க ணேசம்
　பிடித்தென விடுக்கி லென்ன
தெருளாக மானமில் லாதவொரு சீவனஞ்
　செய்தெனசெ யாம லென்ன
தேகியென வருபவர்க் கீயாத செல்வஞ்
　சிறந்தெனமு றிந்து மென்ன
மருவிளமை தன்னிலில் லாதகன் னிகைபின்பு
　வந்தெனவ ராம லென்ன
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
　மலைமேவு குமரேசனே. (உசு)

உபகார மில்லாதவை.

கடனீர் மிருந்தென்ன வோதிதான் பெருத்தென்ன
காட்டிலவு மலரி லென்ன
கருவேல் பழுத்தென்ன நாய்ப்பால் சுரந்தென்ன
கானின்மழை பெய்து மென்ன
அடர்கழுதை லத்தி* நிலமெல்லாங் குவிந்தென்ன
வரியகுண மில்லாத பெண்
ணழகா யிருந்தென்ன வாஸ்தான கோழை° பல
வரியநூ லோதி யென்ன
திடமினிய பூதம்வைத்த பொன்காத் திருந்தென்ன
திறன்மிகுங் கரடி மயிர்தான்
செறிவாகி நீண்டென்ன வஸ்த்ரபூ ஷணமெலாஞ்
சித்திரத் துற்று மென்ன
மடமிகுந் தவருக்கு முபகார மில்லாத
வம்பர்வாழ் வுக்கு நிகராம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (உஎ)

பதரெனப் படுவோர்.

தன்பெருமை சொல்லியே தன்னைப் புகழ்ந்தபதர்
சமர்கண் டொளிக்கும் பதர்
தக்கபெரி யோர்புத்தி கேளாத பதர்தோழர்
தம்மொடு சலிக்கும் பதர்
பின்புகா ணுவிடந் தன்னிலே புறணிபல
பேசிக் களிக்கும் பதர்
பெற்றதாய் தந்தைதுயர் படவாழ்ந் திருந்தபதர்
பெண்புத்தி கேட்கும் பதர்
பொன்பண மிருக்கவே போயிரக் கின்றபதர்
பொய்சாட்சி சொல்லும் பதர்
புவியோர் நடத்தையை யிகழ்ந்தபதர் தன்மனைவி
புணர்தல் வெளி யாக்கும்பதர்

* லத்தி - சாணம். ° ஆஸ்தானகோழை-அச்சமுறு
மஸ்தான வித்துவான்கள்.

மன்புணரும் வேசையுடன் விபகரிக் கின்றபதர்
மனிதரிற் பதரென்பர் காண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௨அ

காணாவிடிற் றுயரப்படுமவை.

இரவிகா ணா*வனச மாரிகா ணாதபயி
ரிந்துகா ணாத குமுத
மேந்தல்கா ணாநாடு கரைகள்கா ணாவோட
மின்சொல்கா ணாவி ருந்து
சுரபிகா ணாதகன் றன்னைகா ணாமதலை
சோலைகா ணாத வண்டு
தோழற்கா ணாநேயர் கலைகள்கா ணாவமான்
சோடுo கா ணாத பேடு
குரவர்கா ணாதசபை தியாகிகா ணாவறிஞர்
கொழுநர்கா ணாத பெண்கள்
கொண்டல்கா ணாதமயில் சிறுவர்கா ணா வாழ்வு
கோடைகா ணாத குயில்கள்
வரவுகா ணாதசெல விவையெலாம் புவிமீதில்
வாழ்வுகா ணாவிளமை யாம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௨௯

வியாதி மூலங்கள்.

கல்வினான் மயிரினான் மீதூண் விருப்பலாற்
கருதிய விசாரத்தி னாற்
கடுவழி நடக்கையான் மலசல மடக்கையாற்
கனிபழங் கறியுண்ண லால்
நெல்லினா லுமியினா லுண்டபின் மூழ்கலா
னித்திரைக ளில்லாமை யா
னீர்ப்பனிகயி னாற்பனிக் காற்றினி லுலாவலா
னீசெரு கிலேபூற லால்

* வசனம்-தாமரை. o சோடு-துணை.

மெல்லிநல் லார்கல்வி யுதிகழுன் விரும்பலால்
வீழ்மலஞ் சிக்குகையி னான்
மிருசுவை யெடுத்தலா லிளவெயிர்* காய்தலான்
மெய்வாட வேலை செயலால்
வல்லிரவி லேதயிர்கள் சருகாதி ο யுண்ணலால்
வன்பிணிக் கிடமென்பர் காண்
மயில்மேலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (உ0)

சேத்துஞ் சாகாதவர்.

அனைவர்க்கு முபகார மாம்வாவி கூவமுண்
டாக்கினோர் நீதி மன்ன
ரழியாத தேவாலயங் கட்டி வைத்துளோ
ரகரங்கள் ‡ செய்த பெரியோர்
தனையொப்பி லாப்புதல்வ னைப்பெற்ற பேர்பொருது
சமர்வென்ற சுத்த வீரர்
தரணிதனி னிலைநிற் வெகுநாளு மாறாத
தருமங்கள் செய்த பேர்கள்
கனவித்தை கொண்டவர்க ளோயாத கொடையாளர்
காவியஞ் செய்த கவிஞர்
கற்பினின் மிகுத்தவொரு பத்தினி மடந்தையைக்
கடிமணஞ் செய்தோர்க ளி.
மனிதர்கள் சரீரங்கள் போகினுஞ் சாகாத
மனிதரிவ ராகு மன்றோ
மயில்மேலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (உக)

சாகாதிருந்துஞ் செத்தவர்.

மாறாத வறுமையோர் தீராத பிணியாளர்
வருவேட் டகத்தி லுண்போர்
மனைவியை வழங்கியே சீவனஞ் செய்குவோர்
மன்னுமொரு ராச சபையில்

* இளவெயில்-காலைவெயில் ο சருகாதி-இலைப்பதார்த்தம்.
‡ அகரங்கள்-பிராமண வாழ்வீதி.

தூருக நிந்தைசெய் துய்குவோ சிவிகைகள்
சுமந்தே பிழைக்கின்ற பேர்
தொலையா விசாரத் தழுந்துவோர் வார்த்தையிற்
சோர்வுபட லுற்ற பெரியோர்
வீருக மனையா ளனக்கஞ்சி வந்திடு
விருந்தினை யொழித்து விடுவோர்
வீம்புடன் செல்லாத விவகார மதுகொண்டு
மிக்கசபை யேறு மசடர்
மாருக விவரெலா முயிருடன் செத்தசவ
மாகியொளி மாய்வர் கண்டாய்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௧௨

சிறிதும் பயன்படாதவை.

பதராகி லுங்கண விரூதிவிளை விக்கும்
பழமைபெறு சுவராகி லும்
பலருக்கு மறைவாகு மாடுரிஞ் சிடுமலம்
பன்றிகட் குபயோக மாம்
கதமிகு கடாவென்னி லுழுதுபுவி காக்குமேவன்
கழுதையும் பொதி சுமக்கும்
கல்லெனிற் றேவர்களு மாலயமு மாம்பெரும்
கான்புற்று மரவணையாம்
இதமிலாச் சவமாகி லுஞ்சிலர்க் குதவிசெய்
யிழிவுறு குறங்காயி னு
மிரகசப் பிடித்தவர்க் குதவிசெயும் வாருகோ*
லேற்றமா ளிகை விளக்கும்
மதமது மிகும்பரம லோபரா லுபகார
மற்றொருவ ருக்கு முண்டோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௧

* வாருகோல்-துடப்பம்,

உலுத்த ரியல்பு.

திரவியங் காக்குமொரு பூதங்கள் போற்பணந்
   தேடிப் புதைத்து வைப்பார்
சீலைகல மாகவுங் கட்டார்க ணல்லமுது
   செய்துண் ணறமுஞ் செயார்
புரவலர்செய் தண்டந் தனக்கும்வலு வாகப்
   புகுந்திருட ருக்கு மீவார்
புலவரைக் கண்டவுட னோடிப் பதுங்குவார்
   புராணிகர்க் கொன்று முதவார்
விரகறிந் தேபிள்ளை சோறுகறி தினுமளவில்
   வெகுமளைஞ் செலவாக லால்
விளையாடு கிழவனும் பிள்ளையே பிள்ளையென
   மிகுசெட்டி சொன்ன கதைபோல்
வரவுபார்க் கின்றதே யல்லாது லோபியர்கண்
   மற்றொருவ ருக்கீவ ரோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
   மலைமேவு குமரேசனே. (கூசு)

திருவாழிடங்கள்

கடவா ரணத்திலுங் கங்கா சலத்திலுங்
   கமலாச னந்தன்னி லுங்
காகுத்தன் மார்பிலுங் கொற்றவ ரிடத்திலுங்
   காலியின் *கூட்டத்தி லும்
நடமாடு பரியிலும் பொய்வார்த்தை சொல்லாத
   நல்லோ ரிடந் தன்னிலு
நல்லசுப லக்ஷண மிகுந்தமனை தன்னிலும்
   ரணசுத்த வீரர் பாலும்
அடர்கே தனத்திலுஞ் ०சுயவரந் தன்னிலு
   மருந்துளசி வில் வத்திலு
மலாதரு கடப்பமலர் தனிலுமிர தத்திலு
   மதிககுண மான ரூப

* காலி-பசுக்கூட்டம். ० கேதனம்-விருதுக்கொடி,

உணர்விலாப் பிரமராட் சசமுதற் பேய்களை
யுகந்துகூத் தாட்டிவிடலா
முபாயத்தி னுற்பெரும் பறவைக்கு நற்புத்தி
யுண்டாக்க லாமுயிர்பெறப்
பிணமதை யெழுப்பலா மக்கினி சுடாமற்
பெரும்புன லெனச்செய்பலாம்
பிணியையு மகற்றலாங் காலநா துவரையும்
பின்புவரு மென்றுசொலலாம்
மணலையுங் கயிறுத் திரிக்கலாங் கபவர்குண
மட்டுந் திருப்பவசமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (கூசு)

இத்தீக்குணத்தோரிவவிலங்குபோல்வரேனல்.

தான்பிடித் ததுபிடிப் பென்றுமே லவர்புத்தி
தள்ளிச்செய் வோர்குரங்கு
சபையிற் குறிப்பறிய மாட்டாம னின்றவர்
தாம்பய னிலாதமரமாம்
வீம்பினா லெளியவரை யெதிர்பண்ணி நிற்குமொரு
வெறியர்குடை ஞமலியாவார்
மிகநாடி வருமேவோர் முகம்பார்த் திடாலோபர்
மேன்மையில் லாதகழுதை
சோம்பலொடு பெரியோர் சபைக்குட் படுத்திடுந்
தூங்கலே சண்டிக்கடா
சூதுட னெடுத்தோர்க் கிடுக்கணே செய்திடுந்
துஷ்டனே கொட்டுதேளாம்
மாம்பழந் தனைவேண்டி யன்னாளி லீசனை
வலமாக வந்தமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (சய

அற்பர்வாழ்வால்குணம்வேறுபடுதல்.

அற்பர்க்கு வாழ்வுசற் றதிகமா னால்விழிக்
கியாவருரு வுந்தோன் றிடா
தண்டிநின் றேநல்ல வார்த்தைக ளுரைத்தாலு
மவர்செவிக் கேறிடா து
முற்பழக மானபேர் வருகினும் வாருமென
மொழியவும் வாய்வரா து
மோதியே வாதப் பிடிப்புவந் ததுபோல
முன்காலை யகலவைப்பார்
விற்பன மிகுத்தபெரி யோர்செய்தி சொன்னாலும்
வெடுவெடுத் தேசிநிற்பார்
விருதா மகத்துவப் பேயது சவுக்கடி
விழும்போது தீருமென்பார்
மற்புயந் தனினீப மாலையணி லோலனே
மார்பனே வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (சக)

இத்தீங்குளோரிக்கோள்கைபோல்வரெனல்.

அன்னைதந் தையர்புத்தி கேளாத பிள்ளைபோ
லஷ்டமச் சனியாகுவா
னஞ்சாம லெதிர்பேசி நிற்குமனை யாள்வாக்
கிலங்கார கச்சன்மமாம்
தன்னைமிஞ் சிச்சொன்ன வார்த்தைகே ளாவடிமை
சந்திராஷ் டகமென்னலாந்
தன்டாங்கு தாவென்று சடையேறு தம்பியோ
சார்ந்தசன் மச்சூரியன்
நன்னயமி லாதவஞ் சனைசெய்த தமையன்மூன்
றுமிடத் தில்வியாழம்
நாடொறும் விரோதமிடு கொண்டோனை கொடுத்து
ராகுகே துக்கமெனலாம்
[ளோன்

கங்கா சலந்தன்னின் மூழ்கினும் பேய்ச்சுரைக்
காய்நல்ல சுரையாகுமோ
கடலுக்கு ணாழியை யமுக்கியே மொண்டிடிற்
காணுமோ நானாழிதான்
ஐங்காத மோடினுந் தன்வினைக டன்னோடே
யடையாம னீங்கிவிடுமோ
வாரிடஞ் சென்றாலும் வெகுதுலைகள் சுற்றினு
மமைத்தபடி யன்றிவருமோ
மங்காத செந்தமிழ்க் கொண்டுநக் கீரர்க்கு
வந்ததுயர் தீர்த்தமுருகா
மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௬௯)

இடும்பாலழிவு.

சூரபத் மன்பெலமு மிராவணன் றீரமுந்
துடுக்கான கஞ்சன்வலியுந்
துடியான விரணியன் வரப்ரசா தங்களுந்
தொலையாத வாலி திடமும்
பாரமிகு துரியோத னாதினூற் றுவரது
பராக்கிரம மதுகைடவர்
பாரிப்பு மீர்பெலித னாண்மையுஞ் சோமுகன்
பாங்கிலுறு வல்லமைகளும்
ஏரணவு கீரகன் கனதையுந் திரிபுர
ரெண்ணமுந் தக்கனெழிலு
மிவர்களது சம்பத்து நின்றவோ வவரவ
ரிடும்பா லழிந்தவன்றோ
மாரனைக் கண்ணா லெரித்தருள் சிவன்றந்த
வரபுத்ர வடிவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (

நட்புநிலை.

மாமதியின் முயலான தநுதேய் வுழித்தேய்ந்து
 வளருமப் போதுவளரும்
வாவிதனு லாம்பல்கொட் டிகளதனி னீர்வற்றின்
 வற்றிடும் பெருகிலுயரும்
பூமருவு புதல்பூடு கோடையிற் றீய்ந்திடும்
 பொங்குகா லந்தழைக்கும்
புண்டரிக மிரவிபோ மளவிற் குவிந்திடும்
 போதுதய மாகின்மலரும்
தேமுடலி னோக்கிலுயிர் கூடவு மிளைக்குமது
 தேறிலுயி ருஞ்சிறக்குஞ்
சேர்ந்தோர்க் கிடுக்கணது வந்தாலு நல்லோர்
 சினேகமப் படியாகுமே
வாமனசொ ரூபமத யானைமுக னுக்கிளைய
 வாலகுரு பரவேலவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (௪௮)

கைப்பலனுமவை.

பருவத்தி லேபெற்ற சேயும் புரட்டாசி
 பாதிசம் பாநடுகையும்
பலமினிய வாடிதனி லானைவால் போலவே
 பயிர்கொண்டு வருகரும்பும்
கருணையொடு மிக்கநா ணயமுளோர் கையினிற்
 கடனிட்டு வைத்தமுதலுங்
காலமது நேரிற் றனக்குறுதி யாகமுன்
 கற்றுணர்ந் திடுகல்வியும்
விருதரச ரைக்கண்டு பழகிய சினேகமும்
 விவேகிகட் குபகாரமாம்
வீணல்ல வினைவயெலாம் கைப்பலன தாகவபி
 விர்த்தியாய் வருமென்பார்காண்

மருவுலா வியநீப மாலையுந் தும்பை டாள
மாலையும் புனைமார்பனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௪௯)

சமயத்துக்குதவாதவை.

கல்லாது புத்தகந் தனிலெழுதி வீட்டினிற்
கட்டிவைத் திடுவித்தையுங்
காலங்க ளுக்குதவ வேண்டுமென் றன்னியன்
கையிற் கொடுத்த பொருளும்
இல்லாளை நீங்கியே பிறர்பாரி சதமென்
றிருக்கின்ற குடிவாழ்க்கையு
மேறுமா றாகவே தேசாந் தரம்போ
யிருக்கின்ற பிள்ளைவாழ்வும்
சொல்லான தொன்றுமவர் மனமான தொன்றுமாச்
சொல்லும்வஞ் சகர்நேசமுஞ்
சுகியமா யுண்டென் றிருப்பதெல் லாந்தருண
துரிதத்தி லுதவாதுகாண்
வல்லான கொங்கைமட மாதுதெய் வானைகுற
வள்ளிபங் காளநேயா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௫0

திரும்பமாட்டாதவை.

ஆடரவின் வாயினி லகப்பட்ட தவளையு
மானைவா யிற்கரும்பு
மரிதான கப்பலிற் பாய்மரக் காற்றினி
லகப்பட்டு மெலிசாக்கையும்
நாடறிய வேதாரை வார்த்துக் கொடுத்தது
நமன்கைக்கு ளானவுயிரும்
நலமாக வேயணை கடந்திட்ட வெள்ளமு
நாய்வேட்டை பட்டமுசலும்

தேடியுண் பார்க்கைக்கு ளானபல வுடைமையுந்
 தீவாதை யானமனையுந்
திரள்கொடுங் கோவரசர் கைக்கேறு பொருளுந்
 திரும்பிவா ராவென்பர்காண்
மாடமிசை யன்னக் கொடித்திரள்கொள் சோணாடு
 வாழவந் திடுமுதல்வனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (௫௧)

இதினுமிதுநன்றென்பவை.

கடுகடுத் தாயிரஞ் செய்குவதி லின்சொலாற்
 களிகொண் டழைத்தனன்று
கனவேள்வி யாயிரஞ் செய்வதிற் பொய்யுரை
 கருத்தொடு சொலாமைநன்று
வெடுவெடுக் கின்றதோ ரவிவேகி யுறவினில்
 விவேகியொடு பகைமைநன்று
வெகுமதிக ளாயிரஞ் செய்வதி னுரைக்காசு
 வேளைகண் டுதவனன்று
சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடைக்கிங்கு
 சற்றுமிலை யென்னனன்று
சம்பத் துடன்பிணியின் மெலிகுவதி னோயற்ற
 தரித்தி ரியநன்றுகாண்
மடுவினிற் கரியோல மென்னவந் தருள்செய்த
 மான்மருக னைமுதல்வா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (௫௨)

பலகூடினுமொன்றற்கீடாகாதவை.

தாரகைக ளொருகோடி வானத் திருக்கினுஞ்
 சந்திரற் கீடாகுமோ
தாருவிற் கொடிதொனிகள் பலகூடி னாலுமொரு
 தம்பட்ட வோசையாமோ

கோரமிகு பன்றியின் குட்டிபல கூடினொரு
குஞ்சரக் கன்றாகுமோ
கொட்டிமலர் வாவியிற் பலகூடி னாலுமொரு
கோகனக மலராகுமோ
பாரமிகு மாமலைகள் பலகூடி னாலுமொரு
பைம்பொன்மக மேருவாமோ
பண்ணிலாப் பிள்ளைக ளனேகம் பிறந்தும்விற்
பனவொருவ னுக்குநிகரோ
வாரணக் கொடியொரு கரத்திற் பிடித்தொளிர்
வடிவே லணிந்தமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௩௩

அருமையறிதல்.

மனையாளை யருமையைப் புணர்பவர்க ளேயறிவர்
மட்டிக் குரங்கறியுமோ
மக்களுடை யருமையைப் பெற்றவர்க ளேயறிவர்
மலடிதா னறிவதுண்டோ
கணவருடை யருமையைக் கற்பான மாதறிவள்
கணிகையா னவளறிவளோ
கருதுமொரு சந்தியின் பாண்டமென் பதையருங்
கலைவான நாயறியுமோ
குணமான கிளியருமை தனைவளர்த் தவரறிவர்
கொடியபூ னையுமறியுமோ
குலவுபெரி யோரருமை நல்லோர்க ளேயறிவர்
கொடுமூடர் தாமறிவரோ
மணவாள னீயென்று குறவள்ளி பின்றொடர
மனமூறி தழுவுமழகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௩௪

தீச்சார்பார்பயன்படாதவை.

மடுவினிற் கஞ்சமல ருண்டொருவ ரணுகாமல்
வன்முதலை யங்கிருக்கும்
மலையினிற் றேனுண்டு சென்றொருவர் கிட்டாமன்
மருவியதில் வண்டிருக்கும்
நெடுமைதிகழ் தாழைமல ருண்டொருவ ரணுகாம
னீங்காத முள்ளிருக்கும்
நீடுபல சந்தன விருக்ஷமுண் டணுகாது
நீளரவு சூழ்ந்திருக்கும்
குடிமல்கி வாழ்கின்ற வீட்டினிற் செல்லாது
குரைநாய்க ளங்கிருக்குங்
கொடுக்குந் தியாகியுண் டிடையூறு பேசுங்
கொடும்பாவி யுண்டுகண்டாய்
வடிவையுங் கடுவையும் பொருவுமிரு கண்ணிகுற
வள்ளிக் குகந்தகணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (ருரு)

வேசையரிழிவு.

பூவில்வே சிகள்வீடு சந்தைப் பெரும்பேட்டை
புனைமலர் படுக்கைவீடு
பொன்வாசல் கட்டில்பொது வம்பலமுடுத்த துகில்
பொருவில்சூ தாடுசாலை
மேவலா கியகொங்கை கையாடு திரள்பந்து
விழிமனங் கவர் தூண்டிலாம்
மிக்கமொழி நீர்மே லெழுத்ததிக மோகமொரு
மின்னலிரு தொடைசர்ப்பமாம்
ஆவலா கியவல்கு லேலா தண்டம் வாங்குமிட
மதிகபட மாமன துகல்
லமிர்தவா யிதழ்சித்ர சாலையெச் சிற்குழி
யவர்க்காசை வைக்கலாமோ

அதிமூளா வெண்காடு செங்காடு காளத்தி
யத்தனே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

கற்பு மேம்பாடு.

தன்கணவ னுருவமாய்த் தற்புணர வந்தோன்
றனக்கினங் காதநிறையா
டழற்கதி கிரமமாலும் பொழுதுவிடி யாமலுஞ்
சாபங் கொடுத்தசெயலாள்
மன்னிவள ரழன்மூழ்கி யுலகறியா வேதனது
மகிழ்நனைச் சேர்ந்துபரிவாள்
மைந்தனைச் சுடவந்த விறைவன் றடிந்தவடி
வாண்மாலை யானகனிவாள்
நன்னதி படிந்திடுவ தென்னவா ரழன்மூழ்கி
நாயகனை மேவுதயவா
ஞ்னிலம் புகழ்சாலி பேர்பெறு நளாயினி
நளினமலர் மேல்வைதேகி
அன்னமென வருசந்த்ர மதிதுரோ பதியென்ப
ராதியே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

கோடியுடுக்குநாள்.

கறைபடா தொளிசேரு மாதிவா ரந்தனிற்
கட்டலாம் புதியசீலை
கலைமதிக் காகாது பலகா லுமைமையினிற்
கடிதுநனை வுற்றொழிதரும்
குறைபடா திடாவரும் வீரியம் போபுரிய
குருதிவா ரந்தனக்குக்
கொஞ்சநா ளிற்கிழியும் வெற்றிபோம் புந்தியிற்
குருவார மதிலணிந்தால்

மறைபடா தழகுண்டு மேன்மேலு நல்லாண்ட
வருமினிய சுக்கிரற்கோ
வாழ்வுண்டு திருவுண்டு பொல்லாத சனியற்கு
வாழ்வுபோ மரணமுண்டாம்
அறைகின்ற வேதாகமத்தின்வடி வாய்விளங்
கமலனே யருமைமதவே
ளனுதினமு மனதினினே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. ௬௧

சகுனம்.

சொல்லரிய கருடன்வா னரமரவ மூஞ்சூறு
சூகரங் கீரிகலைமான்
துய்யபா ரத்வாச மட்டையெலி புன்குகை
சொற்பெருக மருவுமாங்கை
வெல்லரிய காடிகாட் டான்பூனை புலிமேல்
விளங்குமிரு நாவுடும்பு
மிகவுரைசெ யிவையெலாம் வலமிருந் திடமாகில்
வெற்றியுண் டதிகலமாம்
ஒல்லையின் வழிப்பயண மாகுமவர் தலைதாக்க
லொருதுடை யிருத்தல்பற்ற
லொருதும்மல் லணையிட லிருமல்போ கேலென்ன
வுபசுருதி சொல்லினையெலாம்
அல்லலரு நல்லவல வென்பர்முதி யோர்பரவு
மமலனே யருமைமதவே
ளனுதினமு மனதினினே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. ௬௨

இதுவுமது.

நரிமயில் பசுங்கிள்ளை கோழிகொக் கொடுகாக்கை
நாவிசிச் சிலியோந்திதான்
கரையான் கடித்தவாய் செய்போத்துடன் மேதி
நாடரிய சுரபிமறையோர்

வரியுழுவை முயலிவை யனைத்தும்வல மாயிடின
வழிப்பயண மாகைநன்று
மற்றுமிவை யன்றியே குதிரையனு மானித்தல்
வாய்ச்சொல்வா வாவென்றிடல்
தருவளை தொனித்திடுதல் கொம்புகிடு முடிமுரசு
தப்பட்டை யொலிவல்மீவட்டுத்
தனிமணி முழுக்கெழுத லிவையெலா மூர்வழி
தனக்கே நன்மையென்பார்
அருணகிர ணுதயத் தருணபா னுவையனைய
வண்ணலே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. ௨௯

இதுவுமது.

தலைவிரித் தெதிர்வருத லொற்றைப் பிராமணன்
றவசிசன் னாசிதட்டான்
றணமிலா வெறுமார்பி மூக்கறையல் விறகுதலை
தட்டைமுடி மொட்டைத்தலை
கலன்வழி மடந்தையர் குசக்கலஞ் செக்கான்
கதித்ததில தைலமிவைகள்
காணவெதிர் வரவொணா நீர்க்குட மெருக்கூடை
கனிபுலா லுபயமன்ரயோர்
நலமிகு சுமங்கலை கிழங்குரு தகமங்கை
நாளும்வண் ணானழுக்கும்
நகைபெருகு பாற்கலச மணிவளையன் மலரிவைக
ளடியெதிர் வரநன்மையாம்
அலைகொண்ட கங்கைபுனை வேணியாய்ப் பரசணியு
மண்ணலே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. ௩௦

உணவில்விலக்கு.

கைவிலக் குக்கொளும் பாலசப் பால்வருங்
காராக் கறந்தவெண்பால்
காளான் முருங்கைசுரை கொம்மடி பழஞ்சோறு
காந்திக் கரிந்தசோறு
செவ்வையில் சிறுகீரை பீர்க்கத்தி வெள்ளுப்பு
தென்னைவெல் லமலாவகளு
சிரிலா வெள்ளுள்ளி யீருள்ளி யிங்குவொடு
சிறப்பில்வெண் கத்தரிக்காய்
எவ்வமில் சிவன்கோயி னிர்யாலி யங்கிரண
மிலகுசுட ரில்லாதவூ
ணிவையெலாஞ் சீலமுடை யோர்களுக் காகா
வெனப்பழைய நூலுரைசெயும்
ஐவகைப் புலன்வென்ற முனிவர்கின் னவர்போற்று
மமலனே யருமைமதவே
ளனுதினமு மனதினினி ருச்சதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. ௩௫

நற்பொருளிற் குற்றம்.

பேரான கங்கா நதிக்குமதன் மேல்வரும்
பேனமே தோஷமாகும்
பெருகிவளர் வெண்மதிக் குள்ளுட் களங்கமே
பெரிதான தோஷமாகும்
சீரான தபோதனர்க் கொருவர்மேல் வருகின்ற
சீற்றமே தோஷமாகுந்
திகின்முடி மன்னவர் விசாரித் திடாதொன்று
செய்வதவர் மேற்றோஷமாம்
தாராள மாய்மிகத் தந்துளோர் தாராமை
தானிரப் போர்தோஷமாஞ்
சாரமுள நற்கருப் பஞ்சாறு கைப்பதவர்
தாலஞ்செய் தோஷமாகும்

ஆராயு மொருநான் மறைக்குமெட் டாதொளிரு
மண்ணலே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. சுசா

மனைகோல்வதற்கு மாதம்.

சித்திரைத் திங்கடனின் மனைகோல மனைடாகச்
செல்வமுன் டதினுநலமே
சேரும்வை காசிக்கு மேனு ளரன்புரக்
கியிட்ட தாணியாகா
வெற்றிகொ ளிராகவன் றேவிசிறை சேர்கடகம்
வீறல்ல வாவணிசுகம்
மேவிடுங் கன்னியிர ணியன்மாண்ட தாகாது
மேன்மையுண் டைப்பசிக்கே
உத்தமங் கார்த்திகைக் காகாது மார்கழியி
லோங்குபா ரதம்வந்தகா
லுயர்வுண்டு மகரத்தின் மாசிமா தத்தில்விட
முமபர்கோ னுண்டதாகா
தத்தநீ மாரனை யெரித்தபங் குனிதானு
மாதுமோ வருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. சுசு

விருந்துவாரம்.

செங்கதிர்க் குறவுபோம் பகைவரு விருந்தொருவர்
செய்யொணு துண்ணொணது
திங்களுக் குறவுண்டு நன்மையாம் பகைவருஞ்
செவ்வாய் விருந்தருந்தார்
பொங்குபுத னன்மையுண் டுறவாம் விருந்துணப்
பொன்னவற் கதிகபகையாம்
புகரவற் காகிலோ நெடுநாள் விரோதமாய்
போனவுற வுந்திரும்பும்

டங்குங்கர் சனிவார நல்லதா மிதனினு
மனமொத் திருந்தவிடமே
வாராய மாய்ப்போய் விருந்துண விருந்துதவ
வாய்த்தாளா ளென்றறியலாம்
அங்கையில் விளங்கிவளர் துங்கமழு வாளனே
யண்ணலே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. ௬௮

பூப்புவாரம்,

அருக்கனுக் கதிரோகி யாவணற் சோமனுக்
கானகர் புடையளாவா
ளங்கார கற்குவெகு துக்கியா வாள்புந்தி
யளவில்லைங் குழவிபெறுவாள்
திருத்தகு வியாழத்தின் மிக்கசம் பத்தினொடு
சிறுவரைப் பெற்றெடுப்பாள்
சீருடைய பார்க்கவற் கதிபோக வதியுமாங்
திருவுமுண் டாயிருப்பாள்
கருத்தழிந் தெழில்குன்றி வருமைகொண் டலைகுவாள்
காரிவா ரத்திலாகில்
களபமுலை மடமாதர் புட்பவதி யாம்வார
காலபல னென்றுரைசெய்வார்
அருத்தியுட னெளியேனை யாட்கொண்ட சோதியே
யண்ணலே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. ௬௯

பூப்பிலக்கணம்.

வறுமனைப் பாதுவரு மேடத்தி லிடபத்தின்
மாறாது விபசாரியாம்
வாழ்வுகண்டு போகமுண் டாகுமிது னங்கடகம்
வலிதினிற் பிறனையணைவாள்

சிறுமைசெயு மிடிசேர வண் மிருகேந்தி ரற்கெனிற்
சீர்பெறுவள் கன்னியென்னில்
செட்டுடைய துலையெனிற் பிணியான் மெலேந்திடுவ
டேளினுக் குத்தனுசெனில்
நெறிசிதைவள் பூருவத் தபரநெறி யுடையளா
நீண்மகர மான்மிலளா
நிறைபோக வதிகும்ப மெனின்மீன மென்னிலோ
நெடியபே ரறிவுடையளாம்
அறிவாளர் மடமாதர் தமையறிவி ராசிபல
னதுவென்ப ரருமைமதவே
ளனுதினமு மனதினினே கருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. ௭௦

தீவுங்கடலும்.

நாவலந் தீவினைச் சூழ்கருங் கடலளவு
லட்சம்யோ சனையிதனையே
நாடொறுஞ் சூழ்வதில் வந்தீ வதைச்சூழ்த
னற்கழைச் சாற்றிடன்கடல்
மேவுமது சூழ்வது குசத்தீ வதைச்சூழ்தன்
மிகுமதுக் கடலதனையே
விழைவொடுஞ் சூழ்தலகிர வுஞ்சதீவம்மிதனின
மேற்சூழ்த னெய்க்கடலதாம்
பூவிலிது சூழ்தல்சா கத்தீவ மிங்கிதைப்
போர்ப்பது திருப்பாற்கடல்
போதவது சூழ்தல்சான் மலிதீவ மாந்தயிர்ப்
புணரியப் பாலுமப்பால்
ஆவலுறு புட்கரத் தீவா மிதைச்சூழ்வ
தரும்புனற் றருமைமதவே
ளனுதினமு மனதினினே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே ௭௧

மேலானபொருள்

கழிசுத்த மாயிருந் ததிலும் படைக்கான
துரகமோர் மாணிக்கமாந்
சூழ்புவிக் கரசனு யதிலேவி வேகமுள
துரையுமோர் மாணிக்கமாம்
பழுதற்ற வதிரூப வதியுமாய்க் கற்புடைய
பாவையோர் மாணிக்கமாம்
பலகலைகள் கற்றறி வுடக்கமுள பாவலன்
பார்க்கிலோர் மாணிக்கமாம்
ஒழிவற்ற செல்வனு யதிலேதி யாகியா
முசிதனோர் மாணிக்கமாம்
முத்தம குலத்துதித் ததிலுமோ மெய்ஞ்ஞான
முடையனோர் மாணிக்கமாம்
அழிவற்ற வேதாக மத்தின்வடி வாய்விளங்
கமலனே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. எ௨

உண்டியிலையும்முறையும்.

வாழையிலை புன்னைபுர சுடனற் குருக்கத்தி
மாப்பலாத் தெங்குபன்னீர்
மாசிலமு துண்ணலா முண்ணுக வோவரசு
வம்சஞ் செழும்பாடலம்
தாழையிலை யத்தியா லேரண்ட பத்திரஞ்
சகதேவ முண்முருக்குச்
சாருமிவை யன்றிவெண் பாலெருக் கிச்சிலை
தனிலுமுண் டிடவொணாதால்
தாழ்விலாச் சிற்றுண்டி நீரடிக் கடிபருகல்
சாதங்கள் பலவருந்தல்
சற்றுண்டன் மெத்தவு ணித்தனையு மெய்ப்பிணி
தனக்கிட மெனப்பருகிடார்

ஆழிபுடை சூழுலகில் வேளாளர் குலதிலக
னாகுமெம தருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுரதேவனே. ௭௩

கவிஞர்வறுமை.

எழுதப் படிக்கவகை தெரியாத மூடனை
யிணையிலாச் சேடனென்று
மீவதில் லாதகன லோபியைச் சபையதனி
லிணையிலாக் கர்ணனென்றும்
அழகற்ற வெகுகோர ரூபத்தை யுடையோனை
யதிவடிவ மாரனென்று
மாயுத மெடுக்கவுந் தெரியாத பேடிதனை
யாண்மைமிகு விஜயனென்றும்
முழுவதும் பொய்சொல்லி யலைகின்ற வஞ்சகனை
மொழியரிச் சந்த்ரனென்றும்
மூதுலகி லிவ்வணஞ் சொல்லியே கவிராஜா
முறையின்றி யேற்பதென்னோ
அழலென வுதித்துவரு விடமுண்ட கண்டனே
யமலனே யருமைமதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுரதேவனே, ௭௪

கவிஞன்.

தெள்ளமிர்த தாரையென மதுரக் கவித்தைப்
தேன்மடை திறந்ததெனவே
செப்புமுத் தமிழினொடு நாடகவிதை நாற்பொரு
டெரிந்துரைசெய் திறமையுடனே
விள்ளரிய காவியத் துட்பொரு ளலங்காரம்
விரிவிலக் கணவிகற்பம்
வேறுமுள தொன்னூல் வழக்குமுல கத்திடல்பு
மிக்கபிர பாதவண்ணமு

உள்ளவெல் லாமறிந் தலையடங் குங்கடலை
 யொத்தறிஞ சபைகண்டபோ
தோங்கலை யொலிக்கின்ற கடல்போற்ப்ர சங்கம்
 துரைப்பவன் கவிஞனாகும்
அள்ளிவிட முண்டகட வாயனே நேயனே
 யமலனே யருமைமதவே
ளனுதினமு மனைதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீ சுரதேவனே. எரு

நற்சார்பு.

காணரிய பெரியோர்க டெரிசனம் லபிப்பதே
 கண்ணிணைகள் செய்புண்ணியங்
கருணையா யவர்சொன்மொழி கேட்டிட லபிப்பதிரு
 காதுசெய்திடு புண்ணியம்
பேணியவர் புகழையே துதிசெய லபித்திடுதல்
 பேசில்வாய் செய்புண்ணியம்
பிழைபாம லவர்தமைத் தொழுதிட லபிப்பதுகை
 பெரிதுசெய் திடுபுண்ணியம்
வீணெறிசெ லாமலவர் பணிவிடை லபிப்பதுடன்
 மேனிசெய் திடுபுண்ணியம்
விழைவொடவர் சொற்படி நடந்திட லபிப்பதே
 மிக்கபூ ருவபுண்ணியம்
ஆணவ மெனுங்களை களைந்தறி வினைத்தந்த
 வண்ணலே யருமைமதவே
ளனுதினமு மனைதினினை தருசதுர கிரிவள
 ரறப்பளீ சுரதேவனே. எசு

பிறந்தநாளோடுவருகிற வாரபலம்.

செனம நக்ஷத்திரத் தாதிவா ரம்வரிற்
 றீராதலைச்ச லுண்டாந்
திங்களுக் காகில்வெகு சுகபோசனத்தினொடு
 திருமாதி னருளுமுண்டாம்

வன்மைதரு மங்கார வாரம்வந் தாற்சிறிதும்
வாராது சுகமென்பர்
மாசில்பல கலைபயில்வர் மேன்மையாம் புத்தியெனும்
வாரத்துடன் கூடினல்
நன்மைதரு குருவார மதுசேர்ந்து வரிலாடை
நன்மையுட னேவந்திடும்
நாரிய ருடன்போக மிகவுமுண் டொருவெள்ளி
நல்லவா ரத்தில்வந்தால்
அன்மருவு பீடையுண் டாமென்பர் சநியனுக்
கமலனே யருமை மதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே எ

இதனையுடையவர்க் கிதுவில்லையெனல்.

பொன்னுசை யுள்ளவர்க் குருவேது வுரவேது
பொங்குபசி யுள்ளபேர்க்குப்
போதவே சுசியேது ருசியேது மயல்கொண்டு
பொதுமாதர் விழிவலையிலே
எந்நாளு மலைபவாக் கச்சமொடு வெட்கமே
தென்றென் றுமுறுகல்விமே
லிச்சையுள பேர்க்கதிக சுகமேது துயிலேது
வெளிதா யிருந்துகொண்டே
பன்னூளு மலைபவர்க கிகமேது புகமேது
பாரிலொரு வர்க்கமாமே
பண்ணியிடு மூடருக் கறமேது மறமலாற்
பகர்நிறைய மொன் றுளதுகாண்
அன்னுண வருகரி யுரித்தணியு மெய்யனே
மத்தனே யருமைமதவே
எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே. எ

வீறுட னுதாரிதான் மிடியான போதினிலு
 மிகநாடி வருபவர்க்கு
வேறுவகை யில்லையென் றுரையாதி யன்றளை
 வியந்துள மகிழ்ந்துதவுவான்
மாறுபடு சூரசங் காரகம் பீரனே
 வடிவே லணிந்தமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (எகூ)

இன்னவர்க்கிதுவில்லையெனல்.

சார்பிலா தவருக்கு நிலையேது முதலிலா
 தவருக் கிலாபமேது
தனயயிலா தவர்தமக் குறவேது பணமிலா
 தார்க்கேது வேசையுறவு
ஊரிலா தவர்தமர்க் கரசேது பசிவேளை
 யுண்டிடார்க் குறுதியில்லையே
துணைமையில் லாதவர்க் கறமேது முயல்விலார்க்
 குறுவதொரு செல்வமேது
சோர்விலா தவருக்கு மற்றுமொரு பயமேது
 சுகமிலார்க் காசையேது
தூர்க்குணமி லாதவர்க் கெதிராளி யேதிடர்செய்
 துஷ்டர்க் கிரக்கமேது
மார்புருவ வாலிமே லஸ்திரம் விடுத்தநெடு
 மான்மருக னுமுருகா
மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (அ0)

இதினுமிதுநன்றெனல்.

பஞ்சரித்* தருமையறி யார்பொருளை யெய்தலிற்
 பலர்மனைப் பிச்சைநன்று
பரிவாக வுபசார மில்லா விருந்தினிற்
 பட்டினி யிருக்கைநன்று

*பஞ்சரித்து-உபசாரமாட்ப்பேசி.

தஞ்சமொரு முயலையடு வென்றிதனில் யானையொடு
சமர்செய்து தோற்றநன்று
சரசகுண மில்லாத பெண்களைச் சேர்தலிற்
சன்னியா சித்தனன்று
அஞ்சலார் தங்களொடு நட்பா யிருப்பதனி
லரவினொடு பழகுவதுநன்
றந்தணர்க் காபத்தி லுதவா திருப்பதனி
லாருயிர் விடுத்தனன்று
வஞ்சக ருடன்கூடி வாழ்தலிற் றனியே
வருந்திடுஞ் சிறுமைநன்று
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (அக)

நிலையாதவை.

கொற்றவர்கள் ராணுவமு மாறுநே ராகிய
குளங்களும் வேசையுறவுங்
குணமிலார் நேசமும் பாம்பொடு பழக்கமுங்
குலவுநீர் விளையாடலும்
பற்றலார் தமதிடை வருந்துவிசு வாசமும்
பழையதா யாதிநிணறும்*
பாதார மாதரது போகமும் பெருகிவரு
பரங்கான வாற்றுவரவும்
நற்றுமொரு துர்ப்புத்தி கேட்கின்ற பேருறவு
நல்லமத யானைநட்பும்
நாவினல் லுறவுமொரு நாள்போ லிராதிவைக
ணம்பப் படாதுகண்டாய்
மற்றுமொரு துணையில்லை நீதுணையெ னப்பரவும்
வானவர்கள் சிறைமீட்டவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (அஉ

*நிணறு-உக்ருகம்.

நற்புலவர் தீப்புலவர்செயல்.

மிக்கான சோலையிற் குயில்சென்று மாங்கனி
விருப்பமொடு தேடிநாடும்
மிடைகருங் காகங்க ளெக்கனி யிருந்தாலும்
வேப்பங் கனிக்குநாடும்
எக்காலும் வரிவண்டு பங்கேரு கத்தினி
லிருக்கின்ற தேனைநாடு
மெத்தனை சுகந்தவகை யுற்றாலு முருள்வண்
டினந்துர் மலத்தைநாடும்
தகவோர் பொருட்சுவை நயங்களெங் கேயென்று
தாம்பார்த் துகர்ந்துகொள்வார்
தாழ்வான வன்கண்ணர் குற்றமெங் கேயென்று
தமிழிலா ராய்வர்கண்டாய்
மைக்காவி விழிமாது தெய்வானை யுங்குறவர்
வள்ளியுந் தழுவுதலைவா
மயில்மேலறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (அக)

தாழ்தற்பெருமை.

வேங்கைகள் பதுங்குதலு மாமுகி லொதுங்குதலும்
விரிசிலை குனிந்திடுதலும்
யேடம தகன்றிடலும் யானைக ளொடுங்குதலும்
வெள்விடைக டுள்ளிவிழலும்
மூங்கில்கள் வணங்குதலு மேலவ ரிணங்குதலு
முனிவர்க ணயந்துகொளலும்
மூதிர்படை யொதுங்குதலும் வினைஞர்க ளடங்குதலு
முதலினர் பயந்திடுதலும்
ஆங்கரவு சாய்குதலு மகிழ்மல ருலர்ந்திடலு
மாயர்குழல் சூடுபடலு
மம்புவியி லிவைகாரி யங்களுக் கல்லாம
லதனு லிளைப்புவருமோ

மாங்கனிக் காவரனை வலமது புரிந்துவளர்
 மதகரிக் கிளையமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (அ௪)

தெய்வச்செயல்

சோடாய் மரத்திற் புறாரண் டிருந்திடத்
 துறவுகண் டேவேடுவன்
றோலாம லவையெய்ய வேண்டுமென் றொருகணை
 தொடுத்துவில் வாங்கிநிற்க
ஊடாடி மேலே யெழும்பிடி லடிப்பதற்
 குலவுரா சாளிகூட
வுயரப் பறந்துகொண் டேதிரிய வப்போ
 துதைத்தசிலை வேடனடியில்
சேடாக வல்விடந் தீண்டவே யவன்விழச்
 சிலையிற் றெறித்தவாளி
சென்றிரா சாளிமெய் தைத்துவிழ வவ்விரு
 சிறைப்புறா வாழ்ந்ததன்றோ
வாடாம லினைவெலா மிவன்செயல்க ளல்லாதுன்
 மனச்செயலி னாலும்வருமோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (அ௫)

பாடலியல்பு.

எழுத்தசைகள் சீர்தளைக ளடிதொடைகள் சிதையா
 திருக்கவே வேண்டுமப்பா
வீறாம் பொருத்தமொடு மதுரமாய்ப் பளபளப்
 பினியசொற் கனமையவேண்டும்
அழுத்தமிகு குறளினுக் கொப்பாக வேபொரு
 ளடக்கமு மிருக்கவேண்டு
மன்பான பாவின மிசைந்துவரல் வேண்டுமூ
 லலங்கார முற்றதுறையில்

பழுத்துள முவந்தோகை யுற்றுவரல் வேண்டும்
படிக்குமிசை கூடல்வேண்டும்
பாங்காக வின்னவை பொருந்திடச் சொற்கவிதை
பாடிற் சிறப்பென்பர்காண்
மழுத்தினஞ் செங்கைதனி லைவத்தகங் காளனருண்
மைந்தனென வந்தமுருகா
மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௮௬)

விபூதிதரிக்கு முறைமை.

பத்தியொடு சிவசிவா வென்றுதிரு நீற்றைப்
பரிந்துகை யாலெடுத்துப்
பாரினில் விழாதபடி யண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீதிலொழுக
நித்தமூ விரல்களா னெற்றியி னழுந்தவுற
நினைவாய்த் தரிப்பவர்க்கு
நீடுவினை யணுகாது தேகபரி சுத்தமா
நீங்காம விமலனங்கே
சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்திலே
தாண்டவஞ் செய்யுந்திரு
சஞ்சலம் வராதுபர கதியுதவு மிவரையே
சத்தியுஞ் சிவனென்னலாம்
மத்தினிய மேருவென வைத்தமு தினைக்கடையு
மான்மருக னணமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௮௭)

விபூதிவாங்கு முறைமை.

பரி*தனி லிருந்துமியல் சிவிகையி லிருந்துமுயர்
பலகையி லிருந்துமிகவே
பாங்கான வம்பலந் தனிமேலே யிருந்தும்
பருத்ததிண் ணையிலிருந்தும்

* பரி-குதிரை.

தெரிவொடு கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேனின்று
  திருநீறு வாங்கியிடினுஞ்
செங்கையொன் றாலும்விரன் மூன்றாலும் வாங்கினுந்
  திகழ்தம் பலத்தினோடும்
அரியதொரு பாதையி னடக்கின்ற போதிலு
  மசுத்தநிற மானவதிலு
மங்கே தரிக்கிலுஞ் சந்திடிற் றள்ளினு
  மவர்க்குநர மென்பர்கண்டாய்
வரிவிழி மடந்தைகுற வள்ளிநா யகிதனை
  மணந்துமகிழ் சகநாதனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
  மலைமேவு குமரேசனே. (அஅ

இவ்வுறுப்பாற் பயனில்லெனல்.

தேவால யஞ்சுற்றி டாதகா லென்னகா
  றெரிசியாக் கண்ணென்னகண்
தினமுமே நின்கமல பாதத்தை நினையாத
  சிந்தைதா னென்னசிந்தை
மேவாக மஞ்சிவ புராணமவை கேளாமல்
  விட்டசெவி யென்னசெவிகள்
விமலனை வணங்காத சென்னியென் சென்னியணி
  விடைசெயாக் கையென்னகை
நாவார நினையேத் திடாதவா யென்னவாய்
  நற்றீர்த்த மூழ்காவுட
ஞானிலத் தென்னவுடல் பாவியா கியசனன
  நண்ணினுற் பலனேதுகாண்
மாவாகி வேலைதனில் வருசூரன் மார்புருவ
  வடிவேலை விட்டமுருகா;
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
  மலைமேவு குமரேசனே (அகூ

நற்பொருளொடு தீப்பொருள் பிறத்தல்.

கோகனக மங்கையுடன் மூத்தவள் பிறந்தென்ன
குலவுமாட்டின்கணதர்தான்
கூடப் பிறந்தென்ன தண்ணீரி னுடனே
கொடும்பாசி யுற்றுமென்ன
மாக*ருணு மமுதினெடு நஞ்சம் பிறந்தென்ன
வல்லிரும் பிற்றுருத்தான்
வந்தே பிறந்தென்ன நெடுமரந் தனின்மொக்குள்
வளமொடு பிறந்தென்னவுண்
பாகுமிகு செந்நெலொடு பதர்தான் பிறந்தென்ன
பண்ணுமொரு தாய்வயிற்றிற்
பண்புறு விவேகியொடு கயவர்கள் பிறந்தென்ன
பலனேது மில்லையன்றே
மாகனக மேருவைச் சிலையென வளைத்தசிவன்
மைந்தனென வந்தமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (கூ௦)

தன்னினத்தாலழிவு.

குலமான சம்மட்டி குறடுகைக் குதவியாய்க்
கூரிரும் புகளைவெல்லுங்
கோடாலி தன்னுளே மரமது நுழைந்துதன்
கோத்திர மெலாமழிக்கும்
சலமான பார்வைசேர் குருவியான் துவந்து
நண்ணுபற வைகளையார்க்கு
நட்புடன் வளர்ந்தகலை மானென்று சென்றுதன்
னவில்சாதி தனையிழுக்கும்
உலவுநற் குடிதனிற் கோளர்க ளிருந்துகொண்
டுற்ஃறுரை யிடழிப்ப
ருளவனில் லாமலூ ரழியா தெனச்சொல்லு
முலகமொழி நிசமல்லவோ

---

*மாகர்-தேவர்.

வலமாக வந்தா னிட்டத்தினிற் கனிகொண்ட
மதயானை தன்சோதரா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௬௧)

விணுக்குழைத்தல்.

குயின்முட்டை தனதென்று காக்கையடை காக்குங்
குணம்போலு மீக்க*ளெல்லாங்
கூடியே தாமுண்ண வேண்டுமென் றேதினங்
கூடுய்த்த நறவுபோலும்
பயில்சோர †ருக்குப் பிறந்திடத் தாம்பெற்ற
பாலனென் றுட்கருதியே
பாராட்டி முத்தமிட் டன்பாய் வளர்த்திடும்
பண்பிலாப் பருடர்போலும்
துயிலின்றி நிதிகளைத் தேடியே யொருவர்பாற்
றொட்டுத் தெறித்திடாம
றொகைபண்ணி வைத்திடுவர் கைக்கொண்டுபோகவரு
சொந்தமா னவர்வேறுகாண்
வயிரமொடு சூரனைச் சங்கார மேசெய்து
வானவர்க் குதவுதலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௬௨)

இதுவேசினிது பயன்படாதெனல்.

அழலுக்கு ளேவிட்ட நெய்யும் பெருக்கான
வாற்றிற் கரைத்தபுளியு
மரிதான கமரிற் கவிழ்த்திட்ட பாலும்வரு
மலைகைகட் கிடுபூசையும்
சுழல்பெருங் காற்றினில் வெடித்தபஞ் சும்மணற்
சொரிநறும் பனிநீருநீள்
சொல்லரிய காட்டுக் கெறித்தநில வும்கடல்
சுழிக்குளே விடுகப்பலும்

*ஈக்கள்-தேன்,வண்டுகள். †சோரர்-கள்ளபுருஷர்,

விழலுக் கிறைத்திட்ட தண்ணீரு முகமாய
வேசைக் களித்தபொருளும்
வீணருக் கேசெய்த நன்றியும் பலனில்லை
விருதாவி தென்பர்கண்டாய்
பழுலைப் பசுங்கிள்ளை முன்கைமலே மங்கைதரு
வண்ணக் குழந்தைமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (சுஙக)

கைவிடத்தகாதவர்.

அன்னைசுற் றங்களையு மற்றைநான் முதலா
வடுத்துவரு பழையோரையு
மடிமைவ ரிற்றப்பி வந்தவொரு வேந்தனையு
மன்பான பெரியோரையும்
தன்னைநம் பினரையு மேழையா னவரையுஞ்
சார்ந்தமறை யோர்தம்மையுந்
தருணமிது வென்றால் லாபத்து வேளையிற்
சரணம் புகுந்தோரையும்
நன்னயம தாகமுன் னுதவிசெய் தோரையு
நாளுந் தனக்குறுதியாய்
நத்து சேவகனையுங் காப்பதல் லாதுகைக
நழுவவிட லாகாதுகாண்
மன்னையிலு மினியசெஞ் சேவலுஞ் செங்கைமலர்
வைத்த சரவணபூபனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (சுஙச)

தகாதசெயல்.

அண்டிவரு முற்றூர் பசித்தங் கிருக்கவே
யன்னியர்க் குதவுவோரு
மாசுதபு பெரியோர்செய் நேசத்தை விட்டுப்பி
னற்பரை யடுத்துப்பேருந்

கொண்டவொரு மனையாளிருக்கப் பரத்தையைக்
கொண்டாடி மருவுவோரும்
கூறுசற் பாத்திர மிருக்கமிகு தானமது
குணமிலார்க் கீய்ந்தபேரும்
கண்டுவரு புதியோரை நம்பியே பழமையரைக்
கைவிட் டிருந்தபேருங்
கரிவாலை விட்டுநரி வால்பற்றி நதிநீர்
கடக்கின்ற மரியாதைகாண்
வண்டடர் கடப்பமலர் மாலிகா பரணமணி
மார்பனே யருளாளனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௯௫)

நல்லோர் முறைமை.

கூடியே சோதரர்கள் வாழ்தலா லுந்தகு
குழந்தைபல பெறுதலாலுங்
குணமாக வேடிச்சை விட்டுமன் னையாலுங்
கொடும்பிதிர்க் கிடுதலாலுந்
தேடியே தெய்வங்க ளுக்கீத லாலுந்
தியாகங் கொடுத்தலாலுஞ்
சிறியோர்கள் செய்திடும் பிழையைப்பொறுத்துச்
சினத்தைத் தவிர்த்தலாலும்
நாடியே தாழ்வாய் வணங்கிடுத லாலுமிக
நல்வார்த்தை சொல்லலாலு
நன்மையே தருதலாற் சூழ்ச்சிகள் வராவிவை
நல்லோர்கள் செயுமுறைமைகாண்
வாடிமன நொந்துதமிழ் சொன்னனக் கீரன்முன்
வந்துதவி செய்தமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௯௬)

அடைக்கலங்காத்தல்.

அஞ்சலென நாயினுட றருமன் சுமந்துமுன்
னூற்றைக் கடத்துவித்தா

னடைக்கல மெனுங்கயற் காகநெடு மாலுட
னருச்சுனன் சமர்புரிந்தான்
தஞ்சமென வந்திடு புறுவுக்கு முன்சிபி
சரீரந் தனைக்கொடுத்தான்
றடமலைச் சிறகரிந் தவனைமுன் காக்கத்
ததீசிமுது கென்பளித்தான்
இன்சொலுட னேபூத தயவுடைய ராயினோ
ரெவருக்கு மாபத்திலே
பினியதஞ் சீவனை விடுத்தாகி லுங்காத்
திரங்கி ரக்ஷிப்பரன்றோ
வஞ்சகிர வுஞ்சமொடு தாருகன் சிங்கமுகன்
வளர்சூர னுடல்கீண்டவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே (கூஎ)

யோக்கியா யோக்கியம்.

பாலினொடு தேன்வந்து சேரில்ருசி யதிகமாம்
பருகுநீர் சேரிலென்னும்
பவளத்தி னிடைமுத்தை வைத்திடிற் சோபிதம்
படிகமணி கோக்கிலென்னும்
மேலினிய மன்னர்பால் யானைசேர் வதுகனதை
மேஷமது சேரிலென்னும்
மிக்கான தங்கத்தி னவமணி யுறிற்பெருமை
வெண்கல் லழுத்திலென்னும்
வாலிப மினார்களுட னிளையோர்கள் சேரினலம்
வளைகிழவர் சேரிலென்னும்
மருவுநல் லோரிடம் பெரியோர் வரிற்சிரியம்
வருகயவர் சேரிலென்னும்
மாலிகை தரித்தமணி மார்பனே தெய்வயானை
வள்ளிக்கு வாய்த்தகணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே (கூஅ)

பெரியோரியல்பு,

அன்னதானஞ் செய்தல் பெரியோர்சொல் வழிநிற்ற

லாபத்தின் வந்தபேருக்
கபயங் கொடுத்திடுத னல்லினஞ் சேர்ந்திடுத
லாசிரியன் வழிநின்றவன்
சொன்னமொழி தவறாது செய்திடுதல் தாய்தந்தை
துணையடி யருச்சனைசெயச்
சோம்ப லில்லாமலுயிர் போகினும் வாய்மைமொழி
தொல்புவியி னாட்டியிடுதல்
மன்னரைச் சேர்ந்தொழுகல் கற்புடைய மனைவியொடு
வைகினுந் தாமரையிலை
மருவுநீ ரெனவுறுத லிவையெலா மேலவர்த
மாண்பென் றுரைப்பரன்றோ
வன்மையின் மேலுவர்ந் திவ்வுலக மொருநொடியில்
வலமாக வந்தமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௯௯)

நாலின்பயன்.

வன்னமயி லேறிவரு வேலாயுதக் கடவுண்
மலைமே லுகந்தமுருகன்
வள்ளிக் கொடிக்கினிய வேங்கைமர மாகினோன்
வானவர்கள் சேனாபதி
சன்னமொழி யுமையா டிருப்புதல்வ னரன்மகன்
கங்கைபெற் றருள்புத்திரன்
கணபதிக் கிளையவொரு மெய்ஞ்ஞான தேசிகக்
கடவுளா வினன்குடியினான்
பன்னரிய புல்வயலில் வாழ்கும ரேசர்மேற்
பரிந்துகுரு பாததாசன்
பாங்கான தமிழா சிரியவிருத் தத்தினாற
பாடலொரு நூறுநாடி
நன்னயம தாகப் படித்தபேர் கேட்டபேர்
நாடொறுங் கற்றபேர்கள்
ஞானயோ கம்பெறுவர் பதவியா வும்பெறுவர்
நன்முத்தி யும்பெறுவரே. (௧௦௦)

குமரேசசதகம்-முற்றிற்று.

Emily
7789